# AN EVALUATION OF REHABLITATION ACTIVITIES FOR TSUNAMI VICTIMS IN THE CHEDDIPALAYAM VILLAGE

**BY**
**ARUMUGAM KARUNAMOORTHY**
**INDEX NUMBER EU/O6/MDE/16**

MDE37
Thesis
Library - EUSL

**This Dissertation submitted to the Post Graduate Studies Unit, Faculty of Commerce and Management, Eastern University, Srilanka. As a partial fulfillment of the requirement of Master in Development Economics (M, D, E).2008.**

**POSTGRAUATE STUDIES UNIT**
**FACULTY OF COMMERCE AND MANAGEMENT**
**EASTERN UNIVERSITY, SRILANKA**
**2008**

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

ஆசியாவில் 26.12.2004 அன்று சுனாமி எற்படுத்திய தாக்கம் இலங்கையிலும் பொருமளவில் உயிர் இழப்புக்களையும் சொத்து இழப்புக்களையும் எற்படுத்தியது.இலங்கையின் கரையோர மாவட்டங்களான அம்பாறை மட்டக்களப்பு கொழும்பு கம்பஹா மாத்தறை அம்பாந்தோட்டை கிளிநொச்சி முல்லைத்தீவு புத்தளம் திருகோணமலை யாழ்ப்பாணம் காலி களுத்துறை ஆகிய 13 மாவட்டங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.மட்டக்களப்பில் உள்ள 14 பிரதேச செயலகங்களில் 8 பிரதேச செயலக பிரிவில் சுனாமி பாதிப்பு எற்பட்டது. அந்த வகையில் ம.தெ.எ.பற்று பிரதேச செயலகப்பிரிவும் சுனாமி பாதிப்பு எற்பட்ட பிரதேச செயலகமாக காணப்படுகிறது. அப்பிரதேச செயலக பிரிவில் உள்ள ஒரு கிராமமாக செட்டிபாளைய கிராமம் அடங்குகின்றது. இதில் சுனாமி பாதிப்பினால் 13 உயிர் இழப்புக்கள் 26காயப்பட்டவர்கள், உடமைகள் வீடுகள், தொழில் உபகரணங்கள், விவசாய நிலங்கள், நீர் சுற்றாடல், தொழில்கள், சமூக சுகாதார தாக்கம் எற்பட்டன எனலாம்.

அரசாங்க திணைக்களங்கள் நன்கொடையினர்கள் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் தரவு பாவனையாளர் போன்றோருக்கு கிராம அபிவிருத்தி திட்டமிடலுக்கு தேவையான தகவல்களை வழங்குதல். சுனாமிக்கு பின் வழங்கப்பட்ட புனர்வாழ்வுவசதிகளை மதிப்பிடல் போன்றன பிரதான நோக்கங்களாக காணப்படுகிறது. 10வீதமான குடும்பங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படுத்தப்பட்டன குடும்பங்களின் தொழில் தன்மைக்கேற்ப வீதம் பெற்றுக்கொள்ளப்பட்டது .இவ் ஆய்விற்கு முதலாம் தர தரவுகள் வினாக்கொத்து கொடுத்து திரட்டப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது .எனினும் நூலாய்வு முடிவுரை போன்றவற்றிற்கு இரண்டாம் தர தரவுகள், புத்தகம், சஞ்சிகைகள், அறிக்கைகள், மூலம் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

மக்களுக்கு வாழ்வாதாரபொருட்கள், வீடுகள், கிணறுகள்,மலசலகூடங்கள் தொழில்உபகரணங்கள், தொழில் மூலப்பொருட்கள் ,போன்றவை கனிசமான அளவு வழங்கப்பட்டுள்ளது.எனினும் நடுத்தர வருமானம் பெறுபவரின் இலத்திரனியல் பொருட்கள் முற்றாக பாதிக்கபட்டு தற்போது பாவிக்கமுடியாத நிலையில் உள்ளமை, முழுமையாக பாதிக்கபட்டவர்களில் சிலபேருக்கு அரைச்சேத கொடுப்பனவாகிய 100000 ரூபாய் மட்டும் வழங்கப் பட்டுள்ளது ஆனால் அவர்களுடைய வீடுகள் எங்கும் வெடித்து காணப்படுகின்றமை, சுனாமியால் பாதிக்கபட்ட மக்களின் கிணறுகள் தற்போதும் குடிநீருக்கு பாவிக்க முடியாமல் சுனாமி பாதிக்காத பக்கம் நீர் எடுத்துச் சென்று பாவிக்கும் நிலை காணப்படுகின்றமை ,அரச அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட வீடுகள் பல பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றமை போன்றவை முக்கியமான பிரச்சனைகளாக காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட 502 குடும்பங்களுக்கு சராசரியாக 700000(ஏழு இலட்சம் ரூபா ஒரு குடும்பத்திற்கு) அண்ணளவாக வழங்கப்பட்டுள்ளது. எனினும் மக்களுக்கு வழங்கப்பட்ட புனர்வாழ்வு வசதிகளில் வாழ்வாதாரமாக வழங்கப்பட்டவற்றில் வழங்கப்பட்டநோக்கம் நிறைவேறவில்லை என்றே கூறலாம். இதனால் பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளுது.இவற்றினை குறுங்கால ,நீண்டகால அடிப்படையில் நடைமுறைபடுத்தப்படும் போது புணர்வாழ்வு ,புணரமைப்பு வசதிகள் நன்கு பெற்று ஓர் அபிவிருத்தியடைந்த கிராமமாக இக்கிராமம் மாற்றமடையும் எனலாம்.

இந்த கற்க்கையானது (This Study) கிராமத்தின எதிர்கால திட்டமிடல் அபிவிருத்திக்கு உதவிபுரியும் எனலாம்

# உள்ளடக்கம்


அத்தியாயம் -01 01 - 03

ஆய்வு அறிமுகம்

அத்தியாயம் - 02 04 - 23

நூலாய்வு

அத்தியாயம் -03 24 –35

Conceptualization and Methodology

(எண்ணக்கருவாக்கமும் ஆய்வு முறையும்)

அத்தியாயம் -04 36 – 84

தரவுப்பகுப்பாய்வும் தரவுமுன்வைத்தலும்

அத்தியாயம் -05 85–100

தரவுகள் பற்றிய கலந்துரையாடல் (Discussion)

அத்தியாயம் -06 101-110

முடிவுரையும் ஆலோசனைகளும்

உசாத்துணைகள் 111

வினாக்கொத்துக்கள் 112-130